முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1509

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.11.2023,** வியாழக்கிழமை

1. அறம்காக்கும் ஞான யோகியே
   ஆற்றல்பட என் அவதாரமாக வந்த
   வரம்பெற்ற ஆறுமுக அரங்கனே
   வள்ளலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
   உரைத்திடுவேன் சோபகிருது துலைதிங்கள்
   (சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 30 ம் நாள், 16.11.2023, வியாழக்கிழமை)
   திங்களிலே அரங்கனுக்கு சக்திகூட
   தெரிவிப்பேன் ஆறுமுகப்பெருமான் யானும்
3. இங்கனமே ஓங்கார அரங்கன் ஞானப்படைகள்
   உயர்வாக தர்மத்தை இன்னும் பெருக்கிவர
   வருகவே அரங்கனுக்கு இன்னும் சக்திகூடும்
   வையகமெங்கும் அரங்கன் பேரில் ஆன தர்மம்
4. அளவிலா இன்னும் பெருகப்பெருக
   பேருலகமெல்லாம் அரங்கன் தொண்டர்படை
   பிசகின்றி பெருமளவில் பெருகி
   ஆறுதலாய் அரங்கன் அவதார நோக்கம் வெற்றிகொள்ள
5. ஆங்காங்கே அறம் நிறைந்த
   ஞானப் படைகள் உருவாகி
   வகைபட இந்த கலியுகம் மாற்றம் காணும்
   வல்லமைபட அரங்கனால் இந்த அற்புதம் நிகழும்
6. நிகழவே உலகோர் அரங்கன் வழி வர
   நிலவுலகில் ஞானப்பண்டிதன் அவர்கட்கெல்லாம் அருளி
   வரமாக அரங்கன் வழி தீட்சை வடிவாக வந்து
   வையகத்தில் வேலவன் யான் காப்புத் தருவேன்

7. தருகவே அரங்கன் வழி உலகமாற்றம் நிகழ
தக்கபடி உயர்வான தொண்டர்களை உருவாக்கி
ஓங்கார உலகம் படைப்பேன்
ஓங்கார ஞான ஆட்சியும் தருவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–